# மதுரைக்காஞ்சியில் சமய நிறுவனங்கள்

***முனைவர் ம.சந்திரசேகரன்***
*முனைவர் பட்ட மேலாய்வாளர்*
*தமிழியல்துறை*
*பாரதிதாசன் பல்கலைக்கழகம்*
*திருச்சிராப்பள்ளி*

சமுதாயத்தில் உள்ள மக்களின் தேவைகளை அல்லது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள சமூக நிறுவனங்கள் கட்டமைக்கப்பட்டன. இந்நிறுவனங்கள் சமூகத்திற்குத் தேவையான செயல்களை ஓர் ஒழுங்குமுறைப்படி நிலையான வழியில் அமைக்கின்றன. இதன் மூலம் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு முயல்கின்றன. அவ்வாறு செயல்படும் காலங்களில் மக்கள் ஏற்றுக்கொள்கின்ற, ஏற்றுக்கொள்ள வேண்டிய விதிகளை வகுக்குகின்றன. இவை குழுவினால் நிலைப்படுத்தப்பட்டுச் செயல்முறை வடிவத்தை அடைகிறது. இதனடிப்படையில் சமூகத்தில் பல்வேறு நிறுவனங்கள் உள்ளன. அவற்றுள் குடும்பம், சமயம், பொருளாதாரம், அரசு, கல்வி எனும் இவ்ஐந்து நிறுவனங்கள் இன்றியமையாதனவாகும். இவ்வடிப்படையில் இக்கட்டுரை மதுரைக்காஞ்சியில் இடம்பெற்றுள்ள சமய நிறுவனங்களை இயம்புவதாக அமைகிறது.

**சமயம் - விளக்கம்**

சமயம் என்பது “தெய்வீக சக்தியைக் (Supernatural) குறித்தும், அந்தத் தெய்வீக சக்திக்கும் மனிதனுக்கும் உள்ள முறையான உறவைக் குறித்தும் விளக்குகிறது. அத்துடன் புனிதத்தன்மை என்னவென்றும், அப்புனிதத் தன்மைக்கும் உலகியல் சார்ந்த நிலைக்கும் உள்ள தொடர்பு என்னவென்றும் விளக்குகிறது. சமய நிறுவனம், மனிதனது பழக்க வழக்கங்கள், வழிபாட்டுச் சடங்குகள், செய்யக்கூடாத செயல்கள், நன்னடத்தை, ஒருங்கிணைதல் இவற்றை உள்ளடக்கி விளக்குகிறது. இது சமயக் குழுக்களுக்கு உட்பட்டோ உட்படாமலோ மனிதனுக்கும் தெய்வீக சக்திக்கும் புனிதத்தன்மைக்கும் உள்ள அடிப்படைத் தொடர்பாக அமைகிறது” (Dictionary of Sociology> 1988.p.345).

சமயம் என்பது அடையாளங்கள் அல்லது குறியீடுகள், நம்பிக்கைகள், மதிப்புகள், சடங்குகள், இயற்கையிறந்த சக்திகள் போன்றவற்றால் நிறுவனமாக்கப்பெற்ற முறை (institutionalized system) என்று குளுக், ஸ்டார்க் (Glook & Stark) கருதுகின்றனர் (Sociology> p.449). இயற்கையின் போக்கையும், மனித வாழ்க்கையையும், கட்டுப்படுத்துவதாகவோ அல்லது இயக்கப் பெறுவதாகவோ நம்பப்பெறும் மனித சக்திக்கும் மேலான ஒரு சக்தியுடன் நல்லிணக்கம் செய்துகொள்வதையே சமயம் என்ற நிறுவனம் குறிக்கின்றது (A History of Religion> p.3).

**சமுதாயம்**

தனி மனிதர்களையும் (individuals), பல்வேறு அமைப்புகளையும், நிறுவனங்களையும், குழுக்களையும், துணைக் குழுக்களையும் தன்னகத்தே கொண்ட ஓர் அமைப்பாகச் சமுதாயம் விளங்குகின்றது. பொதுவான உடற்கூறியல்புகளையும், பொதுவான விருப்பங்களையும் (common interests)> பொதுவான வாழ்க்கை நோக்கங்ளையும் (common mode of life) பொதுவான விதிகளையும் கொண்டுள்ள உறுப்பினர்களை ஒன்றிணைக்கும் சிறியதும், பெரியதும், நிரந்தரமானதுமாகிய அமைப்பைச் சமுதாயம் என்று கூறுவர். மேலும் குறிப்பிட்ட எல்லைக்குள் (specified territory) வாழ்கின்ற மக்களால் மேற்கொள்ளப்பெறும் உட்செயல்களின் (interactions) அனைத்து முறைகளையும் சமுதாயம் எனக் கூறலாம் என்ற விளக்கமும் உள்ளது. ஒரு சமுதாயமானது தனிப்பட்டவர்களின் கூட்டமைப்பு, உரிமை மற்றும் ஒற்றுமை உணர்வு ஏகதேசம் நிரந்திர இயல்பு முதலான சிறப்புத் தன்மைகளைக் கொண்டுள்ளதெனச் சமூகவியலாளர்கள் கருதுகின்றனர்.

**சமயமும் சமூகவியலும்**

சமயத்திற்கும் சமூகவியலுக்குமான தொடர்பை டர்க்கைம், சமயம் சமூக அமைப்பிலிருந்து தோன்றியது என்றும் அது மக்களின் மன உணர்ச்சிகளின் வெளிப்பாட்டுத் தொகுப்பே என்றும் கூறுகின்றார். அதாவது மனிதனின் மன உணர்ச்சிகள் பகிர்ந்து கொள்ளப் பட்டபோது ஒருங்கிணைந்த கருத்துகள் கொண்டவர்கள் குழுக்களாகக்கூடினர். இக்குழு கடவுள் என்ற வடிவத்தை உருவாக்கியது. ஆகவே கடவுள் மனிதனால் உருவக்கப்பட்ட சின்னம் என்பது அவர் கருத்து. சமயம், விஞ்ஞானத்தைப் போல் இயற்கை, மனிதன், சமூகம் இவற்றின் மூலப்பண்புக் கூறுகளை விளக்குவதால் விஞ்ஞானமும் சமயமும் நெருங்கிய தொடர்புடையன என்கின்றார் (Sociology - The Study of Society> 1987. P.289)

வேபர், சமயத்திற்கு ஒரு சமூக அளவு உண்டென்றும் அவ் அளவு வாழ்வின் பிற கூறுகளுடன் அது கொண்டுள்ள தொடர்பாலும் அதன் இயல்பாலும் ஆராயப்படலாம் என்றும் கூறுகின்றார். அவர் சீர்திருத்த அற இயக்கக் கோட்பாட்டின்படி (Protestant Ethics) இறையருளைப் பெறுவதற்குச் சிலரே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் என்றும் இறையருட்பேறின் ஓர் அறிகுறி உலகில் நற்செயல்களைச் செய்தல் என்றும் கூறுகின்றார். இவ்வாறு இறைவனுக்கும் மக்கள் செய்யும் அனைத்துச் செயல்களுக்கும் தொடர்பு உண்டென்று நம்பியதால், தாங்கள் செய்யும் தொழிலைக் கருத்தூன்றிச் செவ்வனே செய்தனர். இதன் விளைவு பொருளாதாரம் ஓரிடத்தில் குவியத் தொடங்கியதென்றும், இது முதலாளித்துவம் வளர வாய்ப்பளித்ததென்றும் கூறுகின்றார். சமய அமைப்பில் சமயத்திற்கும் சமூக வகுப்புகளுக்குமிடையே உள்ள தொடர்பு, சமய குருக்கள், தீர்க்கதரிசிகள் போன்றோருடைய செயல்கள் போன்றவை குறித்தும் ஆராய்கின்றார் (Sociology> 1983. pp.371-372).

"சமயம் மனிதனால் உருவாக்கப்பட்டது. சமயம் மனிதனை உருவாக்குவதில்லை. சமய நம்பிக்கைகளும் கொள்கைகளும் சமூகத்தில் வெடித்தெழக்கூடிய விழிப்புணர்வை மட்டுப்படுத்திப் புரட்சிக்குத் தடையாக அமைகின்றன. இதனால் ஆதிக்கம் செலுத்தும் சிலர், பொருளாதாரச் சுரண்டலுக்குச் சமயத்தைப் பயன்படுத்திப் பெருவாரியான மக்களைத் தங்கட்குக் கீழ்ப்படுத்துகின்றனர். ஆகவே நோய்வாய்ப்பட்ட சமூகத்திற்குச் சமயம், ஒரு குறைபாடுடைய மருந்தாகவே காணப்படுகிறது" எனக் காரல் மார்க்சு குறிப்பிடுகிறார் (Ibid.p.370).

**நிறுவனங்கள்**

சமுதாயம் பல்வேறு நிறுவனங்களைத் தன்னகத்தே கொண்டு திகழ்கின்றது. இந்நிறுவனங்கள் குறித்துச் சமூகவியலாளர்கள் அளிக்கும் விளக்கங்கள் சிலவற்றைக் குறிப்பிடுதல் தகும். ஒழுக்கபூர்வமானதாகவும் சமூகப்பூர்வமானதாகவும் நிர்ணயிக்கப்பெற்றவை எனக் கருதத்தக்க சமூக நடவடிக்கைகளின் சாதாரணமுறையே நிறுவனமாகும் (Sociology - A Study of Society> p.128). நிலைத்து நிற்பதும், அமைக்கப்பெற்றதும், நிறுவப்பெற்றதும், சமுதாயத்தின் ஒன்று அல்லது பல சிக்கல்களைத் தீர்க்கும் ஒழுங்குமுறைகளைத் கொண்டதுமாகிய ஒன்றே நிறுவனம் எனப்படும் (Sociology An Introduction> p.169). பொதுவாக மிக நீண்டகாலமாக நிறுவப்பெற்றதையும், சமூகத்தால் அங்கீகரிக்கப்பெற்றதையும் நிறுவனம் என்றுரைப்பர். இந்நிறுவனங்கள் இன்றியமையாச் சமூகச் செயல்களைச் சுற்றியெழும் சமூக நியமனங்களின் (social norms) ஒழுங்குமுறைகள் எனக் கருதுகின்றனர்.

**சமய நிறுவனம்**

இங்கர் (Yinger)> "சமய நிறுவனம் கூட்டுவாழ்வின் சில சிக்கல்களைத் தீர்ப்பதில் பெரும்பங்கு வகித்து வந்துள்ளது. மனித வாழ்வின் எல்லையிகந்த சிக்கல்களை விளக்குவதற்கும் எதிர்கொள்வதற்கும் ஒவ்வொரு மக்கட் குழுவும் உருவாக்கிக் கொள்ளும் நம்பிக்கைகள், சடங்குகள், உணர்வு ரீதியான மனப்பான்மைகள் இவற்றின் முறையான அமைப்பே சமயம்" என்று விளம்புகிறார் (A Hand Book of Sociology> p.456).

ஸ்டெபின்ஸ் சமயத்திற்கும் சமூகத்தினருக்கும் உள்ள தொடர்பைப் நான்கு நிலைகளில் காண்கிறார். அவையாவன: 1. சமய நடத்தைகள் அல்லது சடங்கு முறைகள், 2. தனி மனிதனின்

சமயப்பங்கு, 3. சமயத் தொடர்புகள் - தலைவர்கள் அல்லது குழுக்களுக்கும் தனி மனிதனுக்கும் உள்ள தொடர்பு, 4. சமய விழுமியங்கள் என்பனவாகும் (Sociology - The Study of Society> 1987. pp.291-292).

**தொல்காப்பியம் - சமய நிலை**

தொல்காப்பியர் காலத்திலும் அவர் காலத்திற்கு முன்பும் சமய உணர்வு காணப்பெற்றுள்ளது. தொல்காப்பியர் இறைவனைக் குறிக்கக் ‘கடவுள்’, ‘தெய்வம்’ என்ற சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். குறிஞ்சிக்கு முருகன், முல்லைக்குத் திருமால், மருதத்திற்கு இந்திரன், நெய்தலுக்கு வருணன் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுவதன் மூலம் தமிழரிடத்தில் சமய உணர்வு இருந்தமையைக் காணமுடிகிறது.

**சைவ சமய நிறுவனம்**

சைவ சமயத்தின் முழுமுதற் கடவுள் ‘சிவன்’. இவர் பிறப்பற்றவர். நிலம், நீர், தீ, காற்று, வான் என்னும் ஐம்பூதங்களும் கலந்து இயங்குகின்ற உலகினைப் படைத்தவன் மழுவாயுதம் கொண்டிருக்கும் பெரியோன். இத்தகைய சிறப்புமிக்க இறையோனுக்கு மாலை வேளையில் இசைக் கருவிகள் முழங்க வழிபாடு நடைபெற்றதை,

**நீரு நிலனுந் தீயும் வளியும்**
**மாக விசும்போ டைந்துட னியற்றிய**
**மழுவா ணெடியோன் றலைவ னாக**
**மாசற விளங்கிய யாக்கையர் சூழ்சுடர்**
**வாடாப் பூவின் இமையா நாட்டத்து**
**நாற்ற உணவின் உருகெழு பெரியோர்க்கு**
**மாற்றரு மரபி னுயர்பலி கொடுமார்**
**அந்தி விழவிற் றூரியங் கறங்க (மதுரைக். 453 – 460)**

எனும் பாடலடிகள் விளம்புகின்றன. சைவ சமய இறைவனான சிவனுக்கு ஆறு கால பூசைகள் நடைபெறும். அப்பூசைகளில் ஒன்று அந்திக் காலப்பூசை. இவ்வழிபாடு மதுரையிலுள்ள சிவதலத்தில் நடைபெற்றதை அறியமுடிகிறது. இச்செயல்கள் சைவ சமய நிறுவனங்கள் வழி நடைபெற்றிருக்கும் என்பதை உத்தறியமுடிகிறது.

**வைணவ சமய நிறுவனம்**

சங்க காலத்தில் முல்லை நிலக் கடவுள் திருமால் என்பதை, ‘மாயோன் மேய காடுறை உலகமும்’ (தொல். அகத். நூ.951) எனும் தொல்காப்பிய நூற்பா வழி அறியமுடிகிறது. ‘திருமால்’ வைணவ சமயத்தின் முழுமுதற் கடவுளாவார் ‘வேத முதல்வன்’ எனவும் அழைக்கபடுவார். ஆழ்வார்களே தமிழகத்தில் வைணவ சமயத்தை வளர்த்தவர்கள். திருமால் திருவோண நட்சத்திரத்தில் பிறந்தவர். இந்நாள் ஓணநாளாகக் கொண்டாடப்படுகிறது. ஓணநாள் கொண்டாட்டம் மதுரையில் நடைபெற்றதை,

**கணங்கொள் அவுணர்க் கடந்த பொலந்தார்**
**மாயோன் மேய ஓண நன்னாட்**
**கோணந் தின்ற வடுவாழ் முகத்த**
**சாணந் தின்ற சமந்தாங்கு தடக்கை**
**மறங்கொள் சேரி மாறுபொரு செருவின்**
**மாறா துற்ற வடுப்படு நெற்றிச்**
**சுரும்பார் கண்ணிப் பெரும்புகல் மறவர்**
**கடுங்களி றோட்டலிற் காணுநர் இட்ட (மதுரைக். 590 - 596.)**

எனும் அடிகள் குறிப்பிடுகின்றன. ஓணநாளில் மறவர்கள் தம்முள் சேரிப்போர் புரிந்துள்ளனர் அப்போரினை மக்கள் கண்டுகளித்துள்ளனர். இதன் மூலம் வைணவ சமய நிறுவனம் மதுரையில் இருந்தமையை உய்த்துணரமுடிகிறது.

**பௌத்த சமய நிறுவனம்**

வட இந்தியாவில் தோன்றிய பௌத்தமதம் அசோகர் ஆட்சிக்காலத்தில் தென்னிந்தியாவில் பரவியது. அசோகர் தமிழகத்தை ஆண்ட மூவேந்தரையும் தன் நண்பர்களாக்கிக் கொண்டு புத்த சமயத்தைப் பரப்பினார் என்பர். இளம்போதியார், அறவணடிகள், மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்,

சங்கமித்திரர், புத்தமித்திரர் முதலானோர் பௌத்தத் தமிழ்ச் சான்றோர் என்பதை தமிழிலக்கியங்களின் வழி அறியமுடிகின்றது. பூதமங்கலம், போதிமங்கை, பொன்பற்றி, காவிரிப்பூம்பட்டினம், மதுரை, நாகை முதலிய இடங்களில் பௌத்தப் பள்ளிகள் இருந்துள்ளன. மதுரையில் பௌத்தப் பள்ளி இருந்தமையை,

**திண்கதிர் மதாணி யொண்குறு மாக்களை**
**ஓம்பினர்த் தழீஇத் தாம்புணர்ந்து முயங்கித்**
**தாதணி தாமரைப் போதுபிடித் தாங்குத்**
**தாமு மவரும் ஓராங்கு விளங்கக்**
**காமர் கவினிய பேரிளம் பெண்டிர்**
**பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சிச்**
**சிறந்து புறங்காக்குங் கடவுட் பள்ளியும் (மதுரைக். 461 - 467.)**

என்ற பாடலடிகள் தெரிவிக்கின்றன. பௌத்தப் பள்ளிக்குப் பெண்கள் தங்கள் குழந்தைகளுடன் வழிபடச் சென்றுள்ளனர். மலர்களுடனும் புகையுடனும் வணங்கும் முறைமை பௌத்தப் பள்ளியில் இருந்துள்ளன. பௌத்தப் பள்ளியின் வழிபாட்டு முறைமைகளைப் பௌத்த சமய நிறுவனங்களே வகுத்திருக்கும்.

**சமணச் சமய நிறுவனம்**

சமணம் என்றால் ‘துறவு’ என்று பொருள். மௌரியப் பேரரசர் காலந்தொட்டுத் தமிழகத்தில் சமணச் செல்வாக்கு மிகுந்ததைக் கன்னட நாட்டுச் சிரவண பெலகோலாக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. பௌத்தத்திற்கு முன்பே சமணம் தமிழகத்தில் பரவியிருந்ததை அக்கல்வெட்டு சுட்டிக்காட்டுகிறது. மதுரையில் வச்சிரநந்தி அமைத்த திரமிள சங்கம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் சிறப்புற்று விளங்கியது. மகேந்திரப் பல்லவன், கூன்பாண்டியன் போன்ற மன்னர்கள் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் சமணச் சமயத்தைத் தழுவியிருந்தனர். சைவக் குரவர்களில் ஒருவரான திருநாவுக்கரசரும் சமணச் சமயத்திலிருந்து சைவராக மாறியவர் என்பது சமய வரலாறாகும். மதுரையில் சமணப் பள்ளி இருந்துள்ளது. அப்பள்ளியில் சமண முனிவர் இருந்து அறவுரை ஆற்றினர். சமணப் பள்ளியின் சுவர்கள் செம்பால் செய்தது போல் உறுதியாக இருந்தன. அச்சுவர்களில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. அழகிய நறுமணமிக்க மலர் சோலைகள் உடைய சமணப் பள்ளி மலைகள் பல ஒன்று சேர்ந்து நின்றதைப் போல் காட்சியளித்தை,

**வண்டுபடப் பழுநிய தேனார் தோற்றத்துப்**
**பூவும் புகையுஞ் சாவகர் பழிச்சச்**
**சென்ற காலமும் வரூஉ மமயமும்**
**இன்றிவண் தோன்றிய ஒழுக்கமொடு நன்குணர்ந்து**
**வானமு நிலனுந் தாமுழு துணருஞ்**
**சான்ற கொள்கைச் சாயா யாக்கை**
**ஆன்றடங் கறிஞர் செறிந்தனர் நோன்மார்**
**கல்பொளிந் தன்ன விட்டுவாய்க் கரண்டைப்**
**பல்புரிச் சிமிலி நாற்றி நல்குவரக்**
**கயங்கண் டன்ன வயங்குடை நகரத்துச்**
**செம்பியன் றன்ன செஞ்சுவர் புனைந்து**
**நோக்குவிசை தவிர்ப்ப மேக்குயர்ந் தோங்கி**
**இறும்பூது சான்ற நறும்பூஞ் சேக்கையுங்**
**குன்றுபல குழீஇப் பொலிவன தோன்ற (மதுரைக். 475 - 488.)**

எனும் பாடலடிகள் இயம்புகின்றன.

**அந்தணர் பள்ளி**

மதுரையில் இருந்த அந்தணர் பள்ளியில் வேதங்களைக் கற்று அவற்றை விளங்கும்படி இயம்பும் ஆற்றல்வல்ல அந்தணமுனிவர்கள் இருந்துள்ளனர். இவர்கள் பூவுலகிலேயே வீடுபேறு பெற்றவர்களாய், அறக்கோட்பாடுகளிலிருந்து தவறாதவர்களாய், எவ்வுயிர்களிடமும் இரக்கம் கொள்பவர்களாய் விளங்கியுள்ளனர். அந்தணர் பள்ளி ஓங்கி உயர்ந்த மலைக்குகையில் உட்புறம் அகன்றிருந்துள்ளது (மதுரைக். 468 - 474).

**முடிவுகள்**

1. மதுரையில் இருந்த சிவன், திருமால் கோயில்களில் மாலை நேர வழிபாடுகள் பல இசைக்கருவிகள் முழங்கச் சிறப்பாக நடைபெற்றுள்ளன.
2. பௌத்தப் பள்ளி, சமணப் பள்ளி, அந்தணர் பள்ளிகளிலும் அந்திக் காலப்பூசை நடைபெற்றுள்ளன. அப்பூசைக்குப் பெண்கள் தம் கணவரையும் பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு பூசைக்கு வேண்டிய மலர்களையும் புகைப் பொருட்களையும் கொண்டு சென்றுள்ளனர்.
3. சமய நிறுவனங்களுக்கிடையில் பூசல்கள் நடைபெற்றதற்கான சான்றுகள் மதுரைக்காஞ்சியில் இடம்பெறவில்லை. இதன் மூலம் சமய நல்லிணக்கம் இருந்தமையை அறியமுடிகிறது.

## Acknowledgements

Author is thankful to The Head> Department of Tamil Studies and authorities of Bharathidasan University> Tiruchirappalli - 24> Tamil Nadu> India> for providing necessary facilities. Author (M.Chandrasekaran) thanks the University Grants Commission> Govt. of India> New Delhi> for Post - Doctoral Fellowship (Ref. No. F./31-1/2017/PDFSS - 2017-18-TAM-16850 dated 19.06.2017).

**துணைநூற் பட்டியல்**

1. பத்துப்பாட்டு, சென்னை : கழக வெளியீடு.
2. இளம்பூரணர் (உ.ஆ.), தொல்காப்பியம் - பொருளதிகாரம், சென்னை : கழக வெளியீடு.
3. Hagedorn> Robert> 1983. Sociology> Toronto: Holt> Rinehart and Winston of Canader Limited
4. Ogburn> William.F.> and Meyer F. Nimkoff> 1979. A Hand book of Sociology> New Delhi: Eurasia Publishing house (pvt) Ltd.>
5. Stebbins> A. Robert> 1987. Sociology - The Study of Society> New York: Harper & Row Publisher.
6. Scott> William> P.> 1988 Dictionary of Sociology> Jawahar Nagar> Delhi.
7. Smith W. Ronalad> Preston W. Frederick> 1976. Sociology - An Introduction> New York: St.Martin.
8. Deb P.C 1981. Rural Sociology - An introduction> New Delhi: Kalyani Publishers.